Air Port for Salem

* 618 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) wheliter this Government has renewed its request to Central Government for establishing an Air Port at Salem; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். சேலத்தில் விமான தளம் ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பை மறு ஆய்வு செய்யுமபடி இந்த அரசு, இந்திய அரசைக்கேட்டுள்ளது.

(இ) சேலத்தைச்சுற்றி தொழில்கள் பெருகிவருவதன் காரணமாக, சேலத்தில் விமான தளம் ஒன்று கட்டுவது அப்பகுதியில் விமானப் போக்குவரத்து வசதி செய்வது ஆகியவை குறித்த அவசியத்தை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. இதற்காக சேலம் நகரிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் அமைந்துள்ள விமான தளத்திற்கான ஏற்ற இடங்களைப்பற்றியும் கருத்து தெரிவித்துள்ளது. ஆனால் சேலத்திற்கு விமானப் போக்குவரத்தை நடத்துவதற்குப் போதுமான போக்குவரத்து வாய்ப்புகள் இல்லையென்றும், நான்காம் திட்டத்தில் மற்றைய முக்கியமான, உடனடி அவசரமுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியமிருப்பதால் சேலத்தில் விமானக்கூடம் அமைப்பதற்கான செயற்குறிப்பை திட்டத்தில் சேர்ப்பது இயலாது என்று இந்திய அரசு இவ்வரசுக்குத் தற்போது தெரிவித்துள்ளது.

Dr. H. V. HANDE : Will the Hon. Minister impress on the Central Government that in view of the fact that we are likely to get the pelletisation plant at Salem, it is necessary that an aerodrome is set up at Salem and that it is all the more necessary now than before? Will the Hon. Minister be able to tell us whether any other city in Tamil Nadu had been recommended by the State Government for setting up an air field and whether the Central Government have accepted that proposal for construction of any other airfield in Tamil Nadu?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : We have very strongly impressed upon the Central Government but they have rejected our claim. We have not recommended for any other aerodrome in Tamil Nadu.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சேலத்தில் உருக்காலை ஏற்படும் என்பதாலும், தொழிற்பேட்டை புதிதாக துவக்க இருப்பதாலும் அங்கே ஒரு விமான நிலையத்தை ஏற்படுத்த மத்திய சர்க்காரை நம் அரசு வலியுறுத்தி, இந்தத் திட்டத்திலேயே அதுவும் இணைக்கப்பட்டு உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறேம். மீண்டும் வலியுறுத்தி, அதற்கான முயற்சி எடுப்போம்.

திரு. எம் சுரேந்திரன் : சார், விமான தளங்கள் ஏற்படுவதில் போக்குவரத்து நபர்கள் எத்தனை தேருவார்கள் என்பதைப் பொறுத்தும், சேலம் உருக்காலை, மேட்டூரில் தொழிற்சாலைகள் ஏற்படுவதாலும்

1970 மார்ச் 31]

போக்குவரத்துக்கு எவ்வளவு ஆட்கள் இடைப்பார்கள் என்பதையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, அங்குள்ள தொழிற்சாலேகளேச் சேர்ந்த வர்கள் விமான தளத்தை அமைக்கவேண்டும் என்று விண்ணப்பித் திருக்கிருர்களா? அதுபற்றி சர்வே செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியார் விண்ணப்பங்கள் பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடத்தில் இல்லே. நம்முடைய அரசு வற்புறுத்தியிருக்கிறது. மீண்டும் வற்புறுத்தும்.

திரு. சி. வீரமணி : தலேவர் அவர்களே, சேலத்தில் விமான தளம் அமைக்க மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ஆகிறது? சங்ககிரியில் சேலம் தொழில்பேட்டை, தொழிற்சாலேகள் ஏற்படுத்திக் கொண்டு வருவதால், விமான நிலேயம் முக்கியமானது என்ற அடிப்படையில் மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி உடனடியாகக் கொண்டு வர முனைவருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விமான தளத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளே நம் அரசு செய்து வருகிறது. ஏற்கனவே செய்திருக்கிறது. மீண்டும் வலியுறுத்தும். விமான தளம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய ரூ. 8 லட்சம் ஆகும் என்று மதிப்பீடு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sometime back there was a proposal to construct airports in every district headquarters. May I know from the Hon. Minister whether that proposal is under consideration of Union Government or State Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விமான தளத்தை அமைத்தால் வரக்கூடிய வருமானம், ஏற்படக்கூடிய செலவு, போக்கு வரத்து வசதிகள் இவையெல்லாம் பரிசிலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு விமான நிலேயம் என்பது பற்றிக் குறிப்பு இல்லே.

Rameswaram-Dhanushkodi road

* 619 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government propose to form a eight- mile long all-whether road from Rameswaram to Dhanushkodi;

(b) if so, at what cost; and

(c) when the work will start?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ-உ) இராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்கு எல்லாக்கால நிலேமைகளிலும் செல்லக் கூடிய சரளேக்கல் சாலே ஒன்று ரூபாய் 21·06 லட்சம் செலவில் ஏற்கெனவே போடப்பட்டுள்ளது.

திரு. கே. விஞயகம் : சார். முன்பு ஒரு நாள் புயல் வீசியதே அப்பொழுது தனுஷ்கோடி பாழ் அடைந்து போனது என்று சொல்லப் பட்டிருக்கிறதே, அப்போழுது எதிர்க்கட்சியில் இருந்த கட்சிக்காரர்கள் அதைத் தடுக்க ஒரு சுவர் நீளமாக, ராமேசுவரத்திலிருந்து தனுஷ் கோடிக்கு கடற்கரையில் கட்டவேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தார்களே, அந்த யோசனே என்ன ஆனது இப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்காரிடம் நாங்கள் சொல்லியிருக்கிறேம். அதையும் பரிசீலித்துக்கொண்டு இருக் கிறேம்.